## கவன ஈர்ப்புகள்

[திரு. அ. பாலுசாமி]

ஒன்றியத்திற்கென உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே ஏற்படுத்துவதைப் பொறுத்தவரையிலே அதை நாம் பரிசிலனை செய்து நிதிநிலைமைக்கு ஏற்ப ஏற்பாடு செய்ய வேண்டும். 1,110 மக்கள் தொகை உள்ள கிராமத்தில் 737 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறன்,

### (34) கேரளாவில் உள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையால் வாளையார் பகுதி விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவது

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேரூர் தொகுதி, வாளையார் பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் கேரள மாநில எல்லைக்குள் உள்ள மலபார் சிமென்ட் ஆலையிலிருந்து வெளிவரும் புகை மற்றும் தூசியால் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

வாளையாரில் உள்ள திருவாளர்கள் மலபார் சிமென்ட் தொழிற்சாலை, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அருகில் கேரள எல்லைக்குள் உள்ளது. இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 1,200 மெட்ரிக் டன் சிமென்ட் தயாரிக்கிறது.

2. தொழிற்சாலை சிமென்ட் தயாரிப்பதற்கு உலர்ந்த முறையை பின்பற்றுகிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு மூலப் பொருள் சுண்ணாம்புக்கல் ஆகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல் களிமண்ணுடன் சேர்ந்து தூளாக்கப்படுகிறது. இந்தத் தூள் தண்ணீருடன் கலக்கப்பட்டு சிறு உருண்டைகளாக்கப்படுகிறது. பின்னர் இவை சூளையில் எரியூட்டப்படுகின்றன. கரி இதற்கு எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. இவற்றிலிருந்து கிளிங்கர் பெறப்படுகிறது. இந்தக் கிளிங்கர், ஜிப்சத்துடன் சேர்த்து சிமென்ட் பெறப்படுகிறது.

## கவன ஈர்ப்புகள்

(டாக்டர் எச். வி. ஹண்டே)

3. தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகைக்கு சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில் முக்கிய ஆதாரங்களாகும். சிமென்ட் உலை மற்றும் சிமென்ட் மில்லில் எலக்ட்ரோஸ்டாளிக்பிசசிபிடேட்டர்களை தொழிற்சாலை அமைத்துள்ளது. தொழிற்சாலை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாளன்று பார்வையிடப்பட்டது. எலக்ட்ரோஸ்டாடிக் பிரஸ்பிடேட்டரை இயக்குவதற்கு சில பிரச்சினைகள் உள்ளது என்றும், இந்த எலெக்ட்ரோஸ்டாடிக் கருவிகளை அமைத்துள்ளவர்களிடம் அதன் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சாலை கூறியுள்ளது.

4. எனினும் இது சம்பந்தமாக கேரள அரசுடனும் கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடனும் தொடர்பு கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாளையார் பகுதியிலுள்ள மலபார் சிமென்ட் ஆலை துவங்கிய நாளிலிருந்து தூசி பரவி அங்கே வாழ்கின்ற விவசாயிகளுக்கும், விவசாய நிலங்களும், கால்நடைகளும் பாதித்து வருவதால், அந்த ஆலையிலுள்ள இயந்திரங்களை இயக்க சில பிரச்சினைகள் இருப்பதாக விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்களைப் பழுதுபார்த்து சரிசெய்த பின்புதான் ஆலையே ஓட்டப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேரள அரசை வற்புறுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலே விவர அறிக்கையில் எல்லா விவரங்களும் இருக்கின்றன. இது சம்பந்தமாக கேரள மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

### (35) வைகை நதியில் மதுரை நகர சாக்கடை நீர் கலப்பது குறித்து.

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' மதுரையில் வைகை நதியில் சாக்கடை நீரும் தொழிற்சாலைகளின் கழிவுநீரும் கலப்பதால் ஏற்படுகின்ற சுகாதாரக்கேடு குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.